குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.

முன்னிலை: திரு.ச.சதாம்உசேன். பி.ஏ., எல்.எல்.பி.,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், ஓமலூர்

எஸ்.டி.சி..எண்.38/2022

ம.சா. 1

2025–ம் ஆண்டு மே மாதம் 20–ம் தேதி செவ்வாய்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சதீஷ்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேசன் | தொழில் | |
| தந்தை பெயர் | ரங்கசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மாலை 03.00 மணி,

Complainant Murugesan present. Advocate Mr.K.Dasaradhan present on behalf of Mr.C.S.Bhavanirajan Counsel for Complainant. Accused Rajkumar present. Advocate Mr.P.Anbarasu present for accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனக்கு எழுத படிக்க தெரியும், நான் தாரமங்கலத்தில் மெடிக்கல் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரி நகைக்கடை நடத்தி வருகிறார். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள புகார் வாக்குமூலம், பிரமாண பத்திரிக்கை மற்ற ஆவணங்கள் என்னால் வழக்கறிஞரிடம் சொல்லப்பட்டு சரிபார்க்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. ஆஜர் எதிரி சீட்டு நடத்தி வருகிறார் என்று வழக்கறிஞர் அறிவிப்பில் நான் கூறியதற்கு சான்றாக யாதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. 06.04.2022 தேதியிட்ட என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்புக்கு 28.06.2022 தேதியிட்ட பதில் அறிவிப்பை எதிரி வழக்கறிஞர் அனுப்பினார் என்றால் சரி.

மேற்சொன்ன பதில் அறிவிப்புக்கு மறு அறிவிப்பு எனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிள்ளேன். அந்த மறு அறிவிப்பை இந்த இந்நீதமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு மறு அறிவிப்பு அனுப்பி இருந்தால் இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்து இருப்பேன் என்றால் எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார். 06.04.2022 தேதியிட்ட சட்ட அறிவிப்புக்கு திருத்த சட்ட அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் எனது வழக்கறிஞர் அனுப்பி இருப்பார். அவ்வாறு திருத்த சட்ட அறிவிப்பு அனுப்பி இருந்தால் இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்து இருப்பேன் என்றால் எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார்.

3. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை ஸ்ரீ அம்மன் ஜீவல்லரி என்ற நிறுவனத்திற்கு சொந்தமான காசோலை என்றால் சரி. இந்த வழக்கில் ஸ்ரீ அம்மன் ஜீவல்லரி என்ற நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. எனது புகார் வாக்குமூலத்தில் ஆஜர் ஏதிரி ஸ்ரீ அம்மன் ஜீவல்லரி நிறுவனத்தின் உரிமையாளர் என குறிப்பிடவில்லை என்றால் சரி. ம.சா.ஆ 5 ல் 15.01.2022 ரூ.3,00,000 – கடனாக கொடுத்துள்ளேன் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரி. ஆனால் எனது புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் 01.11.2021 தேதியில் ரூ.3,00,000/– கடனாக கொடுத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரி. எந்த தேதியில் ஆஜர் எதிரி கடன் வாங்கினார் என்பதை முன்னுக்குப்பின் முரணாக கூறி இந்நீதிமன்றத்தில் நிரூபிக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல.

4. கடன் கொடுத்தாக சொல்லப்படும் தேதியில் வழக்கு காசோலையை தவிர வேறு ஆவணம் பெறவில்லை என்றால் சரி. எனது வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் ஆஜர் எதிரியிடம் பல முறை கடனை திருப்பி கேட்டதாக சொல்லிருந்ததாலும், எந்ததெந்த தேதியில் கடன் திருப்பி கேட்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி.

5.வழக்கு காசோலையில் தேதி, பெயர், எழுத்தால் எழுதப்பட்ட தொகை வேறுவேறு எழுதுகோள்களால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு

காசோலையில் தேதியின் கீழ் இடப்பட்ட கையெப்பமும் அம்மன் ஜீவல்லரி என்ற இடத்தின் கீழ் உள்ள கையெப்பமும் வேறுவேறு ஆக உள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ–5 ல் இரண்டாம் பத்தியில் காசோலையில் எழுத்தபட்டுள்ள மாதம் மற்றும் வருடத்தை மாற்றி காசோலை கொடுக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரி. ஆனால் நான் தாக்கல் செய்துள்ள புகார் வாக்குமூலம் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தேதியை மட்டும் மாற்றி காசோலை கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரி.

6. ஆஜர் ஏதிரி ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் நான் உட்பட சுமார் 57 நபர்களுக்கு எதிராக நொடிப்பு நிலையர் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. அந்த வழக்கில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பதில் உரை தாக்கல் செய்ய வாய்த வாங்கி இருக்கிறேன் என்றால் சரி. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில தாக்கல் செய்துள்ள மனு IP No.1/2022 என்று சொன்னால் சரிதான். அந்த **மனு எ.ம.சா.ஆ–1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அந்த மனுவில் 47 வது எதிர் மனுதாராக நான் சேர்க்கபட்டுள்ளேன் என்றால் சரி. அந்த மனுவின் A அட்டவணையில் 47 வது வரிசையில் எனக்கு கொடுக்கவேண்டிய கடன் ரூ.90,000/– மற்றும் ஒரு கடன் உறுதி சீட்டு கொடுக்கப்படடதாக சொல்லப்பட்டது என்றால் சரி ஆனால் ஆஜர் எதிரி எனக்கு ரூ.3,00,000/– தரவேண்டியுள்ளது.

7.ஆஜர் எதிரி ரூ.3,00,000/– கடன் பெற்றுருந்தாலும் காசோலை ஏதேனும் கொடுக்க பட்டுருந்தாலும் எ.ம.சா.ஆ–1 நொடிப்பு நிலை மனுவில் குறிப்பிட்டு இருப்பார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி 2019 வருடம் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தினால் நிதி சுமை காரணமாக ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் 31.01.2022 தேதியில் நொடிப்பு நிலையர் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. காசோலை கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் ஆஜர் எதிரி வெளியூர் சென்றுவிட்டார், அந்த சந்தர்ப்பத்தி பயன்படுத்தி அவர் கடையில் இருந்த 2019 வருடத்திய காசோலையை எடுத்து நீங்களே தேதியை திருத்தம் செய்து எதிரியின் கையெப்பத்தை நீங்களே பூர்த்தி செய்து மோசடியாக வங்கியில் செலுத்தி ஏதிரி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. ஆஜர் எதிரிக்கும் எனக்கும் சட்டபூர்வமான கடன் எதும் இல்லை என்றால் சரியல்ல. மேற்சொன்ன சட்டபூர்வமான கடன் இல்லாததால் எதிரி இந்த வழக்கு காசோலையை எனக்கு தரவில்லை என்றால் சரியல்ல. 17.03.2022 அன்று காசோலையை வங்கியில் செலுத்த எதிரி அறிவுறுத்தவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ. 1 ல் 15.02.2022 என்ற தேதி குறிப்பிட்டதுள்ளது என்றால் சரி. ஆஜர் எதிரி நொடிப்பு நிலையர் மனு தாக்கல் செய்துள்ளது தெரிந்து வேண்டுமென்றே காசோலையை மோசடி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் ஏதிரி நொடிப்பு நிலையர் மனு தாக்கல் செய்த பின்பு என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லையென்றால் சரியல்ல. நொடிப்பு நிலையர் மனு தாக்கல் பின்பு எதிரிக்கு நான் கடன் கொடுத்தது ஏற்புடையதாக இல்லை என்றால் சரியல்ல. எனவே இந்த மனு சட்டப்படி மற்றும் பொருண்மைகளின் படி செல்லதக்கல்ல எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மாலை 04.09 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.